**OPEN ACCESS**

Manuscript ID: TAM-09032025-8597

Volume: 9

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 21.10.2024

Accepted: 25.12.2024

Published: 01.01.2025

Citation:
Arivalagan, Vinothini. "The Multifaceted Nature of a Woman's Self-Existence – A Study Based on Anar's Poems." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 3, 2025, pp. 16–21.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i3.8597

*Corresponding Author:
avino@ou.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Multifaceted Nature of a Woman's Self-Existence – A Study Based on Anar's Poems

**Vinothini Arivalagan**
*Lecturer, Department of Linguistics*
*Open University of Sri Lanka*
*https://orcid.org/0000-0001-5528-861X*

**Abstract**

*In the world of Eelam poetry, a dedicated space for female poets emerged only after the 1980s. Over time, female poets have expanded their presence, articulating deep feminist thoughts and structuring their poetry with profound linguistic frameworks, establishing a unique identity for themselves. A poet derives themes from society, shaping not only their own literary voice but also influencing the community. In this context, this study explores the multifaceted nature of a woman's self-existence through the deeply personal and evocative poetry of Anar, the pseudonym of IssathReehaana Muhammad Azeez. Anar, hailing from Saindamaruthu in Eastern Sri Lanka, has made a distinct mark as a female poet, crafting a powerful and authentic voice in Tamil literature.*

***Keywords: Eelam poetry, Anar, Literary Voice, Tamil Literature, Woman's Self-Existence***

**References**

1. Anar, OviyamVaraiyatha Thoorigai (The Brush That Paints No Picture), 2004, Moondravathu Manithan Publications.
2. Anar, Enakku Kavithai Mugam (Poetry is My Face), 2007, Kaalachuvadu Publications.
3. Anar, Udal Pachai Vaanam (The Body is a Green Sky), 2009, Kaalachuvadu Publications.
4. Anar, Perungadal Podugiren (I Scatter the Vast Ocean), 2013, Kaalachuvadu Publications.
5. Anar, PodiPodutha Mazhaithooral (The Rain That Sheds Dust), 2013, Kriya Publications.

# பெண்ணின் சுய இருப்பிற்கான பன்முகத்தன்மை – அனாரின் கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

***வினோதினி அறிவழகன்***
விரிவுரையாளர், மொழியியல் துறை
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

***ஆய்வுச் சுருக்கம்***
*ஈழத்துக் கவிதை உலகில் பெண் கவிஞர்களுக்கான தனியான ஓர் இடம் 1980களின் பின்னரே கிடைக்கப் பெற்றது. பெண் கவிஞர்கள் காலஓட்டத்தினூடே கிளை பரப்பி வியாபிக்கின்றனர். பெண்களின் கவிதைகள் தீவிரமான பெண்நிலைவாதச் சிந்தனைகளுடனும் பொருள் ஆழம் கொண்ட பெண்மொழியின் கட்டமைப்பு மூலமும் தமக்கென தனித்த அடையாளத்தைப் பெற்றுக் கொள்கின்றன. ஒரு கவிஞன் கவிதையின் பாடுபொருளை சமுதாயத்தில் இருந்தே பெற்றுக் கொண்டு தன்னையும் செதுக்கிக் கொண்டு, சமுதாயத்தையும் செதுக்க முனைகின்றான். அவ்வகையில், ஈழத்தின் கிழக்கிலங்கையின் சாய்ந்தமருதுவில் பிறந்து, பெண்கவிஞரெனத் தனக்கென தனிமுத்திரை பதித்துக் கொண்ட அனார் என்ற புனைபெயரில் எழுதும் இஸ்ஸத் ர°ஹானா முஹம்மட் அஸீஸ் என்பவரின் கவிதைகளில் பெண்ணின் சுய இருப்பிற்கான ஆத்மார்த்தமான குரலின் பன்முகத் தன்மையினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*
***முக்கியச் சொற்கள்:*** *ஈழக் கவிதைகள், அனார், இலக்கிய குரல், தமிழ் இலக்கியம், பெண்ணின் சுய இருப்பு*

**முன்னுரை**

காலா காலமாகப் பெண்கள் தமது இருப்பினைத் தக்கவைத்துக் கொள்வதற்காகப் போராட வேண்டிய சூழ்நிலைக்கே தள்ளப்பட்டிருந்தனர். இதற்கு சாதகமாக அவர்கள் கையிற் கிடைத்த அருமையான இலக்கிய வடிவமே கவிதை ஆகும். ஈழத்துக் கவிஞரான அனார் தனது கவிதைகளினூடாகப் பெண்களின் பிரதிநிதியாகவும் தன்னனுபவங்களின் ஊடாகவும் தன்குரலினை பன்முகப்படுத்தி ஓங்கி ஒலிக்கச் செய்கின்றார். கவிதைகள் தொன்றுதொட்டு காதல், போர், வீரம் ஆகிய பாடுபொருளைக் கொண்ட போதிலும், காலமாற்றத்திலே அப்பாடுபொருளும் அதன் ஆழமும் பரந்துபட்ட பார்வையை எட்டிப் பார்த்துள்ளது என்பதில் சற்றேனும் ஐயமில்லை. அந்தவகையிலே, அனாரின் கவிதைகளின் ஆத்மார்த்தமான குரலின் பன்முகத்தன்மையினை இந்த வகைப்பாட்டிற்குள் நோக்கலாம்.

1. பெண்ணின் தவிப்பு - அவா
2. பெண் விடுதலை
3. மரபு அழுத்தங்கள்
4. வன்முறை எதிர்ப்பு
5. பெண்ணிருப்பு

**1. பெண்ணின் தவிப்பு - அவா**

மரபுவழி நின்று பார்க்கின்ற போது பெண்கள் ஆணாதிக்கத்தின் அடிமைத் தனத்தில் இருந்து விடுபடமுடியாதவாறே நிற்கின்றனர். இது வேதனைமிக்க நிலையினையே சுட்டிக்காட்டுகின்றது. தூண்டிலில் அகப்பட்ட மீனாக வாழவும் முடியாது அதில் இருந்து மீளவும் முடியாது மனக் கசப்புக்களை, ரணங்களை அடக்கிக் கொண்டு ஆண்களிலே தங்கியிருக்க வேண்டிய நிலையினை அவாவி நிற்கின்றனர். இதனைப் பதிவுகளாக்கித் தரும் கவிஞர் விலங்கினைப் பற்றிப் படரும் ஒட்டுண்ணியாகப் பெண்களைக் காணுகின்றார்.

***"என் உயிர்த்திரி***
***உணர்வு நெய்வற்றி***
***நூர்ந்துவிட முன்வந்து***
***தூண்டிவிடு***
***அல்லது***
***அணைத்துவிட்டுப் போ"***
***(ஓவியம் வரையாத தூரிகை, ஒட்டுண்ணி, ப.22)***

என்ற வரிகள், பெண்ணின் உள்மன உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாத ஆணிடம் வேதனையினை வெளிப்படுத்துகின்றார். ஆணாதிக்கச் சக்திகளால் போடப்பட்ட வேலிகளைத் தகர்த்தெறிய முடியாதிருந்த வேளையில் பெண்ணின் கருத்துக்கள் முனைப்புப் பெறத் தொடங்குகின. இதில் அனாரின் கவிதைகள் அம்பாக எறியப்படுகின்றது. "காயமே மருந்தாகி" என்ற கவிதையில்,

***"அவர்கள் போட்ட பாதையில்***
***அவர்கள் நோக்கிய***
***திசையில்***
***அவர்கள் சுட்டுவிரல்***
***காட்டும் இலக்கில்***
***எம்மை***
***இழுத்துப் போனார்கள்"***
***(ஓவியம் வரையாத தூரிகை, காயமே மருந்தாகி , ப.23)***

என்று பெண்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் அசைந்து கொடுப்பதையும், அதில் இருந்து "விடுதலையாகி வா" என்று பெண்களை அழைப்பதாகக் கவிஞரின் குரல் ஒலிக்கின்றது.

***"இப்புதிய கழுதைகளுக்கு***
***இது காலம் தந்த***
***பாடம் அல்ல***
***காயம் தந்த ஞானம்" (மேலது, ப.23)***

எனப் பெண்ணியத் தளத்தின் ஆழத்தில் இருந்து சொற்கள் மேலெழுவதை அவதானிக்கலாம். சமுதாயத்தில் திருமணச் சந்தையில் விலை போகாத பெண்களைக் கவிஞர் அனார், "அக்காவுக்கு பறவை போல சிரிப்பு" என்ற கவிதையில் பெண்ணின் அவலக்குரலாக ஆண்களை முன்னிறுத்தி வினா எழுப்புகின்றார்.

**2. பெண் விடுதலை**

சமூக இயங்கு தளத்தில் ஆணாதிக்கத்தின் மேலோங்கலானது பெண்ணின் பேச்சு, கருத்துச்சுதந்திரத்தைப் பறித்துத் தமது பலத்தை அதிகரிக்கச் செய்வதற்கான காய் நகர்த்துதலால் நடாத்தப்படுகின்றது. சுமைகளும் வலிகளும் ஆண்களுக்கல்ல

***"கஷ்டங்களை நான் சுமக்க***
***சுகங்களை நீ பெருக்கினாய்"***
***(ஓவியம் வரையாத தூரிகை, துஷ்பிரயோகம், ப.25)***

என ஆண்களைச் சாடும் வரிகள்,

***"என் இனிய வரலாற்றை***
***ஓலங்களைக் கொண்டு***
***கண்ணீரைக் கொண்டு எழுதுவித்தாய்"***
***(மேலது, ப.25)***

எனப் பெண்ணிணத்தின் பிரதிநிதியாகக் குரல் எழுப்புகின்றார்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் தான் இஸ்லாமியப் பெண் என்ற போர்வையில் தனது மத அடையாளத்தை நிலை நிறுத்தாமல் சுயமாக நிமிர்ந்து நிற்கிறார். ஆண்களால் பெண்களுக்கென்று தூரிகை இடப்பட்ட சட்டங்களையும் அழுத்தங்களையும் தகர்த்து தன்னைத் தானே தீர்மானிக்கும் ஆதார சக்தியாக சமூகத் தடைகளைத் தாண்டி குரல் எழுப்புவது ஒட்டுமொத்த பெண் இனத்திற்கும் ஆதாரமாக விளங்குகின்றது.

***"கைகளிரண்டையும்***
***மேலுயர்த்திக் கூவுகின்றேன்***
***நான்***
***நான் விரும்புகிறபடியான பெண்***
***நான் எனக்குள் வசிக்கும் அரசி"***
***(எனக்குக் கவிதை முகம், அரசி, ப.29)***

தடைகள் மிக்க சமூகத்தில் இருந்து வெளிப்படும் இக்குரல் தாம் விரும்பியபடி வாழும் உரிமையைப் பிரகடனப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையாகத் தொனிக்கின்றது. சில இடங்களில் பெண் அடிமைத்தனத்தின் கோரத்தனங்களுக்கு சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நபரும் பொறுப்பானவர்கள்

***"உங்களில் ஒருவரே***
***அதற்கு முழுப் பொறுப்பாளி என்பதையும்***
***தயவு செய்து ஞாபகம் வைத்திருங்கள்"***
***(பெருங்கடல் போடுகின்றேன், நிறங்களை அழுபவள், ப.34)***

என சமுதாயத்தை எதிர்த்துக் குரல் தொடுக்கின்றார்.

### 3. மரபு அழுத்தங்கள்

சமூக அடுக்கமைப்பில் தீர்மானங்களை எடுப்பதில் முதன்மை வகிப்போர் ஆண்களே. பெண்களின் அக - புற உணர்வுகளை மதிக்காது சுய விரும்பியாக விளங்கும் ஆண், மோகத்தின் ஓர் அம்சமாகப் பெண்ணை வரையறை செய்து கொள்கின்றான். ஆண்களின் இத்தகைய தந்திரமான குறியீடுகளாக மந்திரம், பாணனின் இசை, பாரம்பரியம் போன்ற சொற்களைக் கையாள்வது மரபு ரீதியான அழுத்தங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது.

***"பாரம்பரியம் கொண்டாடும் பாணனின் இசை***
***புலன்களை ஸ்பரிசிப்பது"***
***(எனக்குக் கவிதை முகம், குரல் என்ற நதி, ப.18)***

என்ற வரிகள் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு.

மரபின் ஊடாகப் பெண்ணுக்குப் போதிக்கப்பட்ட இலட்சணங்களைத் தகர்த்து மரபு அடிமைத்தனத்தில் இருந்து திளைத்தெழுந்து சக்தி மிக்கவளாக இருக்க வேண்டும். பெண்ணால் மடியேந்தப்பட்ட உயிரினம் பின்னரே பூமியின் கைகளில் தவழ்கின்றது. இது பெண்ணின் பெருமையைப் பறைசாற்றுவதாகும்

***"ஒரு காட்டாறு***
***ஒரு பேரருவி***
***ஓர் ஆழக்கடல்***
***ஓர் அடைமழை***
***எனக்கென்ன எல்லைகள்***
***நான் இயற்கை***
***நான் பெண்"***
***(எனக்குக் கவிதை முகம், நான் பெண், ப.42)***

என வலிமையோடெழும் குரல், பாரதியின் பெண்ணை இழிவு செய்யும் மடைமையைக் கொளுத்துவோம்" என்ற வரிகளை மிஞ்சி வெடித்துக் கிளம்பிய புதுக்குரலாக அமைகின்றது.

மரபு சார் வெளிப்பாட்டில் இருளைத் துக்கமான சகுனத்தின் குறியீடாகவும் துன்பத்தின் குறியீடாகவும் கொண்ட கவிஞர் விடியலையே விரும்புகின்றார். எல்லாக் கவிதைகளிலும் இருள் படர்கின்றது. ஆனால், வெளிச்சம் அவ்விருளைத் துரத்துகின்றது. இந்த இயல்பானது தன்னோடு இணைத்துப் பெண்களை வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்வதற்கான அழைப்பாகவே உள்ளது.

***"இருள் அடந்து இறுதிப் பிசாசுகளுடன்***
***மல்லாந்து கிடக்கும் மலைகளைக்***
***கடந்து செல்கின்றேன்***
***எவ்வளவு பிரகாசம் நீ"***
***(எனக்குக் கவிதை முகம், மண்புழுவின் இரவு, ப.17)***

என்ற வரிகள் பெண்ணின் எதிர்பார்ப்பு, கனவுகள் எல்லாமே இரவு என்ற சிறைக்குள் அகப்பட்டுக் கொள்ளும் அதனைத் தகர்த்து எறிதல் முக்கியம் என்பதனை உணர்த்துகின்றது.

### 4. வன்முறை

ஆண் - பெண் எதிர்ப்பால் உறவினைக் காட்டும் அனார், "மேலும் சில இரத்தக் குறிப்புக்கள்" என்ற கவிதையில் தாய்மையின் அடித்தளத்தில் இருந்து தனது பார்வையை விரித்துச் செல்கின்றார். பெண்ணின் உடலியல் இயற்கையைத் தனது பார்வைக்கூடாகக் காணும் கவிஞர் பழக்கப்பட்ட விடயமாயினும் ஒரு கணம் குருதியைக் காணுகின்ற போது ஏற்படும் திகிலை, பெண்களின் இயற்கையான உணர்வுகளை மனக்கண்முன் கொண்டு வருகின்றார். வன்முறை, போர் என்பவற்றின் வடுக்களாக விரியும் மானிடப் பெருந்துயரின் வலிகள் சொற்சிதறல்களாகப் பீறிடுகின்றது. சமூகத்தில் இடம்பெறும் வன்கலவி, சித்திரவதைகள் பெண்ணின் பேரவலத்தின் சாட்சிகள். ஒரு வேளை வாசகர்கள் பெண்

நிலையில் இரத்தம் பற்றி எழுதப்பட்டதாக இக்கவிதையை எண்ணலாம். ஆனால் அதனை உள்முகமாக நோக்குகின்ற போது போர்ச்சூழலின் பிரதியாகவே பெண்களின் அவலத்தினைக் காட்டிப் பரிணமிக்கின்றது.

**"வன்மத்தின் இரத்தவாடை**
**வேட்டையின் இரத்த நெடி**
**வெறிபிடித்த தெருக்களின் உறையும்**
**அதே இரத்தம்**
**என்னைப் பின்தொடர்ந்து கொண்டே இருக்கின்றது"**

**(எனக்குக் கவிதை முகம், மேலும் சில இரத்தக் குறிப்புகள், ப.23)**

கணவன் கூட மனைவியின் விருப்பின்றி புணருகின்ற போது அருவருப்பும், வெறுப்புமே பெண்ணுக்குத் தோன்றுகின்றது. இது மாற்ற முடியாத வலிகளையும் வேதனைகளையும் கொடுத்து விடுகின்றது. இதனை ஆணின் அதிகாரத் தோரணையில் இடம்பெறும் புணர்ச்சியாகக் கருதலாம். அதற்காக ஓங்கியொலிக்கும் சொற்செட்டுக்கள்,

**"சில்லி சோஸ் ஊற்றப்பட்ட தட்டுக்களில்**
**யோனிகள் பரிமாறப்பட்டன**
**உடனுக்குடன் வெட்டப்பட்ட முலைகளும்**
**விருந்தினரை அதிகம் கவர்ந்திருந்தன"**

**(பெருங்கடல் போடுகின்றேன், மாபெரும் உணவு மேசை, ப.37)**

என்ற வரிகள் சமூகக் கொடுமைகளை மாத்திரம் அன்றி அனைவரும் கிளர்ந்தெழ வேண்டும் என்ற உணர்வினை ஏற்படுத்தி விடுகின்றது.

### 5. பெண் எனும் அடையாளம்

வாழ்ந்தோம் இறந்தோம் என்றில்லாமல் வாழ்ந்த காலத்தில் என்ன செய்தோம்? என்பது சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவனுக்கும் பெருமை. இது ஆண் வர்க்கத்திற்கு மாத்திரமல்ல பெண்ணினத்திற்கும் பொருத்திப் பார்க்க வேண்டியதொன்றாகும். ஒரு பெண் தன் இருப்பின் அர்த்தத்தையும் தனக்கென தனியான அடையாளத்தையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

**"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு"**
**(பாரதி பாடல்)**

என்ற பாரதியின் கேள்வி அனாரை இருவேறு திசைகளில் பெண்ணை நோக்கச் செய்கின்றது. இவரது "குரல் என்ற நதி" அல்லது "திராட்சை ரசம்" என்ற கவிதையில் முன்னிறுத்தும் பெண் அந்தப்புரத்தின் அரசிக்கு நேர்மாறானவளாக அரசி கவிதையில் காட்டப்படுகின்றாள். முதலாமவள் சமூகத்தின் கண்மூடித்தனமான கட்டுமானங்களுக்குள் அகப்பட்டிருக்க, இரண்டாமவள் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிர்ப்பினைப் பிரகடனப்படுத்துபவளாகக் காட்டப்படுகின்றாள்.

**"உன் கனவுகளில்**
**நீ காண விரும்புகிறபடியே**
**நான் அரசி**
**அயல்நாட்டு மகாராஜாக்களின் அரியணைக்கு**
**சவால் விடும் பேரரசி**
**அடிபணிய அல்ல**
**கட்டளையிடப் பிறந்தவள்"**

**(எனக்குக் கவிதை முகம், அரசி, ப.28)**

எனத் தன்குரலை உயர்த்தும் போது இல்லத்தரசி என்ற சொற்பதத்தினையே கேள்விக்கு உள்ளாக்குகின்றார்.

இயற்கையின் அனைத்து வடிவமாகவும் பெண்ணின் இருப்பைக் காணும் அனார் பெண்களைப் புரியாத புதிராகப் பரிமாணம் கொள்ள வைக்கின்றார். இது எங்கெங்கு காணினும் சக்தியாக விளங்குபவள் பெண் என்ற கருத்தைத் தோற்றுவிக்கின்றது. பெண் வலுக்கட்டாயமாக அடைக்கப்பட்ட பாதைகளைக் கண்டு மனஉளைச்சலுக்கு ஆளாகின்றாள். இந்நிலையில், தான் மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்கும் எதிர்ப்புக் குரலை ஓங்கியொலிக்கச் செய்ய வேண்டும். ஆணாதிக்கச் சமுதாயத்தை நோக்கி, தம் பாதையில் குறுக்கிட வேண்டாம் என எச்சரிக்கின்றது. மௌனம் எல்லாம் மலையேறிவிட்டது இனியும் மௌனம்

காக்காதே மீண்டு வா என "வெளியேற்றம்" கவிதையில் குறிப்பிடுவது, பெண்களுக்குத் தமது வாழ்வைத் தாமே நிர்ணயிக்கும் தைரியம் அவசியமானது என்பதை வலியுறுத்தவதாக அமைகின்றது.

எனவே, இவற்றைத் தொகுத்து நோக்குமிடத்து ஈழத்துப் பெண்கவிஞரான அனார் இன, மத வேறுபாடுகளைக் கடந்து பொதுவாகப் பெண் என்ற நிலையினின்று தன் ஆத்மார்த்தமான குரலை எழுப்புகின்றார். பெண்ணின் அக-புற உணர்வுகளையும் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் ஆழமாகக் கொண்டு படிம உத்தி, சிறந்த சொல்லாட்சியினைக் கொண்டு பெண்களின் சுய இருப்பிற்கான ஆத்மார்த்தமான குரலினைப் பன்முகமாக ஒலிக்கச் செய்து தனக்கென தனி முத்திரை பதித்துக் கொண்டுள்ளார்.

**உசாத்துணை நூல்கள்**

1. அனார்., ஓவியம் வரையாத தூரிகை, (2004), மூன்றாவது மனிதன் வெளியீடு.
2. அனார்., எனக்குக் கவிதை முகம், (2007), காலச்சுவடு வெளியீடு.
3. அனார்., உடல் பச்சை வானம், (2009), காலச்சுவடு வெளியீடு.
4. அனார்., பெருங்கடல் போடுகிறேன், (2013), காலச்சுவடு வெளியீடு.
5. அனார்., பொடுபொடுத்த மழைத்தூறல், (2013), க்ரியா வெளியீடு